# டிரினிடி மகளிர் கல்லூரி

நாமக்கல் - 637 002.

2021 – 2022 ஆம் கல்வியாண்டு (இரட்டைப் பருவம்)

முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

தாள் : மனித உரிமைகள் ( 21PHR01)

தலைப்பு : அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

வழங்குபவர் :

முனைவர்.இரா.அ.அனிதா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

http://www.trinitycollegenkl.edu.in/

# முன்னுரை :

மனிதன் இவ்வுலகில் பிறந்தபோதே அவனால் பெறப்பட்ட உரிமைகள் மனித உரிமைகளாகும்.

சீரிய செயலை செய்து செவ்வனே செய்ய முற்பட்ட அமைப்பு ஐ.நா. சபையாகும்.

அதன் அமைப்பே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஆகும்.

# முகப்புரை :

இப்பிரகடனம் தன் முகப்புரையில் எல்லா மனிதர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சுதந்திர உலகை உண்மையாகவும் அமைதியாகவும் நிலைநாட்ட மதிப்பும் உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது.

# ஐ.நா. சபை :

ஐ.நா. சபை நேரடியாக கோடிக்கணக்கான மக்களுக்கு கல்வியையும் தரமான ஆரோக்கியத்தையும் அரசியல் சுதந்திரத்தையும் அமைதியையும் அளிக்கப் பாடுபடுகிறது.

ஐ.நா. பொதுச்சபையின் பணி இதில் மகத்தானது.

# அனைத்துலக மனித உரிமை பிரகடனம் :

1948-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் ஐ.நா.வின் பொதுச்சபை அனைத்துலக மனித உரிகைள் பற்றிய விதிகளை வெளியிட்டது. இது நீண்ட காலமாக மனிதன் பெறத் துடித்து வந்த வாழ்வியல், அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளையும் தன்னுள் கொண்டுள்ளது.

தன் பணிகளை செவ்வனே செய்து முடிப்பதை ஐ.நா.சபை தனது முக்கிய குறிக்கோளாக ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழ்வதுடன் மற்றவரை வாழவிடும் வழிமுறையை உணர்த்துவதே இப்பிரகடனத்தின் மையக் கருத்தாகும்.

# இதன் அமைப்பு :

இப்பிரகடனம் 30 விதிகளைக் கொண்டுள்ளது.

- இதில் 21 விதிகள் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளைக் கொண்டது.
- 6 விதிகள் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளைக் கொண்டது.
- மீதமுள்ள 3 விதிகள் பொது கருத்துக்களைக் கூறுவனவாகும்.

# இதன் அடக்கம் :

- மனித உரிமைகளை எப்பொழுதும் கருத்தில் கொண்டிருத்தல். இறைமையை அங்கீகரித்தல்.
- சட்டத்தின முன் அனைவரும் சமம்.
- மனிதாபிமானமற்ற முறையில் எவரும் தண்டிக்கப்படக் கூடாது.
- காரணமின்றி எவரையும் கைது செய்தலோ, சிறையிலடைத்தலோ, நாடு கடத்தலோ கூடாது.

# தாக்கம் :

1960-ம் ஆண்டு ஐ.நா. வின் பொதுச்சபை இப்பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு குடியேற்ற நாடுகளுக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் சுதந்திரம் அளித்தது.

காரகஸ் மாநாடு (1954), பாண்டுங் மாநாடு (1955), ஐரோப்பியக் கூட்டமைப்பு (1950), ட்ரிஸ்டிக்கு கொடுக்கப்பட்ட உரிமை (1954), பிரான்ஸ் - டுனிசியா ஒப்பந்தம் ஆகியவை மனித உரிமைகளை எந்த அளவுக்கு மதித்து வருகின்றன என்று காட்டுகிறது.

# மதிப்புரை :

பேராசிரியர் க்யூ ரைட் என்பவர் இப்பிரகடனம் ஐ.நா. வின் கருத்தைப் பிரதிபலிக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த மதிக்கத்தக்க சிறப்புமிக்கது என்கிறார்.

பேராசிரியர் ஹம்ரி என்பவர் இப்பிரகடனம் இயற்கை நீதியின் ஒரு பகுதி என்கிறார்.

# முடிவுரை :

இப்பிரகடனம் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கோ, குறிப்பிட்ட மக்களுக்கோ, குறிப்பிட்ட நாட்டிற்கோ மட்டும் பொருந்தக் கூடியதல்ல.

அது அனைத்து காலத்திற்கும், மக்களுக்கும், நாட்டிற்கும் பொருந்தக்கூடியது. இது உலக சமுதாயத்தையே ஒருமித்த வழியில் நடத்திச் செல்லும் வலிமை பெற்றது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

# நன்றி